# மாயக் காகித வளையம்



1. முதலிலொரு பெரிய காகித வளையத்தையும் கத்திரிக் கோலையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

2. காகித வளையத்தை பார்வையாளர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள்.

3. பார்வையாளர்களிடம் நீங்கள் காகித வளையத்தை நீளவாக்கில் இரண்டாக வெட்டுவதாகக் கூறிவிட்டு வெட்டிக் காட்டுங்கள்

4. இரண்டு காகித வளையங்களையும் கைகளில் எடுத்துக் காட்டுங்கள்.

5. உங்கள் மந்திர வார்த்தையான "மந்திர ஜாலம், மாயாஜாலம் " என்று சத்தமாக மூன்று முறை சொல்லி காகித வளையதை விரியுங்கள்.

6. உங்கள் மந்திரத்தால் நீங்கள் இரண்டு காகித வளையங்களை ஒரு பெரிய வளையமாக மாற்றி விட்டீர்கள்











சபாஷ்! நீங்கள் மாய வித்தை செய்யும் மாயாவி தான்.

## இதன் ரகசியம் என்னதெரியுமா?

1. காகிதத்தின் முனைகளை ஒட்டி அதை வளையமாக்கும் முன்பு நீளவாக்கில் இருக்கும் காகிதத்தை ஒரு முறை முறுக்கி பின் முனைகளை ஒட்டவும். இப்படி முறுக்கி ஒட்டியது தெரியாமல் இருக்க, வளையத்தைப் பெரிதாகச் செய்யவும்.

2. காகித வளையத்தை இரண்டாகக் கத்தரித்து பார்வையாளர்களிடம் காட்டும் போது அவற்றை ஒரே கையில் வைத்துக் காட்டுங்கள். தனித்தனியாக கைகளில் எடுத்துப் பிரித்துக் காட்ட முயற்சிக்கவேண்டாம்

நன்றி:
http://www.magicalkingdom.co.uk